டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 20.12.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 152 - Madurai | Online Edition

# ரசாயனங்களிலும், உரங்களிலும் நானோ பூச்சுப் பொருள்கள் ஊட்டச்சத்து பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கின்றன

புது தில்லி, டிச.19

வேளாண்மையில் பயன்படுத்தப்படும் ரசாயனங்களிலும் உரங்களிலும் ஊட்டச்சத்து பயன்பாட்டுத் திறனை நனோ பூச்சுப் பொருட்கள் அதிகரிக்கின்றன. உரங்களின் நானோ பூச்சு என்பது உரத் துகள்களின் மேற்பரப்பில் நானோ அளவிலான பொருட்கள் அல்லது மெல்லிய படலங்களைப் பயன்படுத்தும் செயல்முறையாகும். இந்த அணுகுமுறை உரங்களின் செயல் திறனை மேம்படுத்துகிறது, ஊட்டச்சத்து இழப்பு போன்ற சிக்கல் களை நிவர்த்தி செய்கிறது.



இது விவசாயிகளுக்கு உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும், அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் வழிவகைகளை வழங்குகிறது. நானோ டிஏபி அனைத்து பயிர்களுக்கும் கிடைக்கக்கூடிய நைட்ரஜன், பாஸ்பரஸ் ஆகியவற்றின் சிறந்த ஆதார வளமாக உள்ளது. இது பயிர்களில் நைட்ரஜன், பாஸ்பரஸ் குறைபாடுகளை சரிசெய்யவும் உதவுகிறது. இது சந்தையில் கிடைக்கிறது.

ஒட்டு மொத்த பயிர் செயல்திறனை மேம்படுத்துவதற்காக உரங்கள் உள்ளிட்ட வேளாண் உள்ளீடுகளின் பண்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நானோ உயிரி தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி – மேம்பாட்டு திட்டங்களை அறிவியல், தொழில்நுட்ப அமைச்சகம் ஊக்குவித்து வருகிறது.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு அளித்த பதிலில் மத்திய அறிவியல், தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இதனை தெரிவித்தார்.

# வங்கி திட்டங்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சி

மதுரை, டிச.19

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 18.12.24 புதன்கிழமை வங்கித் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. மதுரை வேளாண்மைக் கல்லூரிக் கிளையின் பாரத் ஸ்டேட் வங்கி மேலாளர் ஜான்சி, இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியை தலைமையேற்று நடத்தினார்.

முனைவர் லூ.நிர்மலா பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்) அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மதுரை மாவட்ட விவசாயிகள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

வங்கி சேமிப்பு, வங்கி காப்பீடு, விவசாய மற்றும் தொழில் கடன், நகைக் கடன் குறித்த முறைகள் விளக்கப்பட்டது, முனைவர் சரவணன், உதவிப் பேராசிரியர் (கால்நடை அறிவியல்) தேசிய கால்நடை இயக்கம் (NLM) மற்றும் மானியம் குறித்தும், முனைவர் ஜோதிலெட்சுமி, உதவி பேராசிரியர் (உணவு மற்றும் சத்தியல்) தொழில்முனைவோர் பின்பற்றும் முறைகள் குறித்தும் விளக்கினார். இந்நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மாவட்ட அளவிலான தேனீ வளர்ப்பு கருத்தரங்கிற்கு அழைப்பு

புதுக்கோட்டை, டிச.19

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையத்தில் மாவட்ட அளவிலான தேனீ வளர்ப்பு கருத்தரங்கம் எதிர்வரும் 23 மற்றும் 24.12.24 ஆகிய நாட்களில் நடைபெற இருக்கிறது.

இக்கருத்தரங்கில் வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி–யாளர்கள், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அதிகாரிகள், தேனீ வளர்ப்பு தொழில் முனைவோர்கள், வெற்றி கரமாக தேனீ வளர்க்கும் விவசாயிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். அதுசமயம் தேனீ வளர்ப்பு சம்மந்தமான




கருத்துக்காட்சியும், வெற்றிகரமாக தேனீ வளர்க்கும் முறைகள் குறித்து வெளிவளாக பார்வையிடல் நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி தேனீ வளர்ப்பு மற்றும் வேளாண்மையில் தேனீக்களின் பங்களிப்புக் குறித்து தெரிந்து கொண்டு, தாங்களும் தொழில் முனைவோராக இக்கருத்தரங்கத்தை நல்வாய்ப்பாகப் பயன் படுத்திக் கொள்ள அழைக்கிறோம்.

மேலும் இக்கருத்தரங்கத்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் முனைவர் இராஜா.ரமேஷ், உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்) தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையம், வம்பன், 86670 39775 என்ற அலைபேசி எண்ணில் அழைத்து முன்பதிவு செய்து கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
• 100% LEAD FREE PIPE
• ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
• 25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
• 20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
• PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 'ஆஸ்திரேலியாவில் உணவு பதப்படுத்துதலின் கல்விசார் மற்றும் வேலைவாய்ப்புகள்' சிறப்புரை




கோயம்புத்தூர், டிச.19 உணவு பதன்செய் பொறியியல் துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், 'ஆஸ்திரேலியாவில் உணவு பதப்படுத்துதலின் கல்விசார் மற்றும் வேலை வாய்ப்புகள்' என்ற தலைப்பில் சிறப்புரையை 18.12.24 அன்று ஏற்பாடு செய்தது. ஆஸ்திரேலியா மெல்போர்ன் கோல்ஸ் குழுமம் செயல்பாட்டுத் தலைவர், ஆர். மோகன்ராஜ் சிறப்புரை வழங்கினார். உணவு பதன்செய் பொறியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம்.பாலகிருஷ்ணன் வரவேற்புரை வழங்கினார்.




வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும்ஆராய்ச்சி நிலைய முதன்மையர், முனைவர் அ.ரவிராஜ் சிறப்புரையை தொடர்ந்து, ஆர்.மோகன்ராஜ், உணவு பதப்படுத்தும் தொழில் சார்ந்த திறனை எவ்வாறு அதிகரிப்பது என்பது பற்றிய நுண்ணறிவு களை வழங்கினார். மேலும் தொழில் முன்னேற்றம் அல்லது பல்வேறு துறைகளுக்கு இடையே நகர்வதற்கு உதவும் கூடுதல் நடைமுறை திறன்கள் மற்றும் அனுபவத்தை வலியுறுத்தினார். உணவு பதன்செய் பொறியியல் துறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 19.12.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 35 | 40 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 40 | 46 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 55 | 60 | 57A | உருளை(ஊட்டி) | 22 | 50 |
| 2 | வெண்டை | 55 | 60 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 19 | 22 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 17 | 20 | 60 | கேரட் | 60 | 65 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 70 | 75 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 68 |
| 6 | புடலை | 35 | 40 | 62 | நூல்கோல் | 45 | 50 |
| 7 | பீர்க்கன் | 45 | 48 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 30 | 34 | 64 | மு.கோஸ் | 20 | 26 |
| 9 | பாகற்காய் | 32 | 35 | 65 | மு.கோஸ்(கலர்) | 0 | 0 |
| 10 | கொத்தவரை | 35 | 40 | 66 | காளிபிளவர் | 40 | 44 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 110 | 120 |
| 12 | அரசாணி | 16 | 20 | 68 | பூண்டு | 200 | 310 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 38 | 69 | இஞ்சி | 46 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 35 | 38 | 70 | புருக்கோலின் | 160 | 190 |
| 15 | சி.வெங்காயம் | 60 | 68 | 71 | பென்னி பீன்ஸ் | 90 | 98 |
| 16 | பெ.வெங்காயம் | 38 | 42 | 72 | குடமிளகாய் | 55 | 60 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 40 | 44 | 73 | ஊட்டி அவரை | 120 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 60 | 65 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 180 | 200 | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 58 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 68 | | | | |
| 22 | வாழைக்காய் | 28 | 32 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 43 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 50 | 58 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 25 | 30 |
| 28 | கறிவேப்பிலை | 85 | 90 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 35 | 40 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 45 | 50 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 35 | 40 | 96 | நேந்திரன் | 65 | 70 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 40 | 45 | 97 | செவ்வாழை | 70 | 78 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 45 | 48 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 78 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 42 | 48 | | | | |
| 55A | துவரை | 0 | 0 | | | | |

# வடகிழக்கு பருவ மழை காரணமாக நீரில் மூழ்கிய நெல் விதைப்பண்ணைகளுக்கான நிவர்த்தி செய்முறைகள்



திருவள்ளூர், டிச.19

திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காரணமாக நடப்பு சம்பா நெல் விதைப் பண்ணைகளில் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. நீரில் மூழ்கி சேதமடைந்த பயிர்களை நிவர்த்தி செய்வதற்கான பயிர் மேலாண்மை முறைகளை கையாள விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத்துறை அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கான உழவியல் பரிந்துரைகள் :

● தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் வடிகால் வசதியை அதிகப்படுத்தி, நீரை வெளியேற்ற வேண்டும். பயிரின் நிலைக்கேற்ப ஊட்டச்சத்து நிர்வாகமும் மேற்கொள்ள வேண்டும்.

● நீர் வடித்த பிறகு பயிரின் வளர்ச்சி சரியக இல்லாத இடங்களில் வளர்ச்சியை மேம்படுத்த ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவுடன் 18 கிலோ ஜிப்சம் மற்றும் 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து, ஒரு நாள் இரவு வைத்திருந்து, இத்துடன் 17 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து வயலில் சீராக தூவ வேண்டும்.

● பயிரின் வளர்ச்சி மிகவும் குன்றி, துத்தநாக சத்து பற்றாக்குறை தென்பட்டால், உடனடியாக ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ ஜிங்க் சல்பேட்டைக் கரைத்து கைத்தெளிப்பான் கொண்டு காலை அல்லது மாலை வேளையில் தெளிக்க வேண்டும்.

● நானோ யூரியாவை ஏக்கருக்கு 500 மில்லி லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இவ்வழிமுறைகளை கடைப்பிடித்து மழையால் பாதிக்கப்பட்ட நெல் விதைப்பண்ணைகளில் தரமான விதையை உற்பத்தி செய்யலாம்.

இத்தகவலை திருவள்ளூர் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் எஸ்.ஸ்ரீதேவி தெரிவித்துள்ளார்.

# ஒருங்கிணைந்த தானிய பாதுகாப்பு முறைகள்

தானிய சேதார பூச்சிகளை கட்டுப்படுத்த சில முறைகளை மட்டும் கடைபிடிப்பதன் மூலம் முழுமையாக இவைகளை கட்டுப்படுத்திட முடியாது. ஒருங்கிணைந்த தானிய பாதுகாப்பு முறைகளே தானிய சேமிப்புக்கு மிக்க உகந்தது என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி, வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டுகொண்டுள்ளார்.

1. அறுவடையின் போதே பூச்சிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாத்தல்.

2. விளைபொருட்கள் சேமிக்கப்படும் இடத்தின் சுற்றுப்புற சூழ்நிலையை நன்கு பாதுகாத்தல்.

3. விளைபொருட்களின் ஈரத்தன்மையை சரியான அளவில் பராமரித்தல்.

4. விளைபொருட்கள் காயவைக்கும் களங்கள், கோணிப்பை, குதிர்கள் மற்றும் கிடங்குகள் ஆகியவற்றில் பூச்சிக்கொல்லிகள் தெளித்தல்.

5. தானியங்கள் சேமித்து வைத்தபிறகு பூச்சிகள் வரும் முன்னரும் பூச்சிகள் தாக்கிய பின்னரும் பூஞ்சாண கொல்லி களை தெளித்து கட்டுப்படுத்துதல்.

6. தானியங்களுடன் சிலரக தாவர பொருட்களை கலந்து சேமித்து பூச்சிகளை கட்டுப்படுத்துதல்.

7. ஒருங்கிணைந்த எலி ஒழிப்பு முறைகளை கடைபிடித்தல்.

8. அறுவடையின் போது பாதுகாத்த விளைபொருட்களை உற்பத்தியாகும் வயல்கள், சேமிப்பு கிடங்கு மற்றும் சேமிப்பு கலன்களில் இருந்தும், பூச்சி, பூஞ்சாணம் தாக்கி இழப்பை அதிகரிக்கின்றன. இதனை தடுக்க மாலத்தியான் 0.1 சதம் அளவில் சேமிப்பு கிடங்கிலும் கலன்களிலும் தெளிப்பது அவசியம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

மேலும் சுவர், தரை, கதவு, சன்னல், இடுக்குகள், குதிர்கள் இவற்றின் மீதும் மூடைகளை நகர்த்தும்போதும் ஆங்காங்கே பறந்தோ ஊர்ந்தோ சென்று பூச்சிகள் பரவுகின்றன.

விளைபொருட்களை சேமிக்கும் முன்பு கொள்கலன்கள் மற்றும் அறைகளை பூச்சி மற்றும் பூஞ்சாணம் இல்லாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம். சேமிப்பு அறைகளின் துவாரங்கள், சுவர் விரிசல் ஆகியவற்றில் வெடிப்பு அற்றதாக சிமென்ட் பூசி, சீர் செய்ய வேண்டும்.

எலிவளை இருப்பின் அதை முற்றிலும் எலி தாக்காமல் சீர்செய்ய வேண்டும். சுவர்களை பாதுகாப்பது மிகவும் அவசியம். கதவுகளின் கீழ் பகுதிகள் 25 செ.மீ. வரை இரும்பு தகட்டால் அடைக்க வேண்டும். சேமிப்பு அறையின் சன்னல், காற்று வெளியேற்றும் மின்விசிறி பொருத்தியுள்ள பகுதிகள் ஆகிய வற்றில் இரும்புவலை சன்னல்கள் பொருத்த வேண்டும்.




தானியங்களின் ஈரத் தன்மையை பராமரிக்க சேமிக்கப்படும் தானியங்களை சிபாரிசு செய்யப்படும் ஈரப்பதத்திற்குள் காய வைத்து சேமிக்க வேண்டும். பொதுவாக ஈரப்பதம் 8 முதல் 10 சதத்திற்குள் இருக்கும்படியாக பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஈரப்பதம் பூச்சிகளின் இனப் பெருக்கத்திற்கு உகந்ததாக இருப்பது மட்டுமல்லாமல் பூசணங்களின் வளர்ச்சியையும் அதிகப்படுத்துகின்றன. இதனால் தானியங்கள் நிறம்மாறி துர்நாற்றம் ஏற்பட்டு உண்பதற்கு தகுதியற்றதாகி விடும்.

எனவே, ஈரப்பதத்தைச் சரியான அளவில் வைத்திருப்பது மிகவும் அவசியம் ஆகிறது என்று கூறப்பட்டுள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# நிலக்கடலை சாகுபடியில் விதை பரிசோதனை அவசியம்

எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழகத்தில் நிலக்கடலை பயிரிட மார்கழி பட்டம், மாசி பட்டம் மற்றும் சித்திரை பட்டம் உகந்தது. இந்த பட்டங்களில் சாகுபடி செய்யும் போது தட்பவெட்ப நிலை சாதாகமாக இருப்பதால் அதிக மகசூல் பெறப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை, மருங்காபுரி, உப்பிலியபுரம், துறையூர், முசிறி, தா.பேட்டை, தொட்டியம் மற்றும் மண்ணச்சநல்லூர் வட்டாரங் களில் பரவலாக நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது.



நிலக்கடலை சாகுபடியில் நல்ல விளைச்சல் பெற சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும். நிலக்கடலையில் அதிக இடுபொருள் செலவாக இருப்பது விதையே. ஈரப்பதம், புறத்தூய்மை, முளைப்புத்திறன் மற்றும் பிற ரகங்களின் கலப்பு விகிதம் ஆகியவற்றால் விதையின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது.

இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதைகளின் தரப்படி நிலக்கடலையின் முளைப்புத்திறன் 70%, ஈரப்பதம் 9% மற்றும் புறத்தூய்மை 96% என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஈரப்பதம் அதிகமாக இருந்தால் பூச்சி மற்றும் பூஞ்சாண தாக்குதலுக்கு வழிவகுக்கும், மேலும் முளைப்புத்திறனும் பாதிக்கப்படும்.

நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் நிலக்கடலையின் தரத்தை பரிசோதனை செய்து பயன்படுத்த வேண்டும் என திருச்சி மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் வே.அறிவழகன் தெரிவித்துள்ளார்.

விதைபரிசோதனை செய்வதற்கு 500 கிராம் நிலக்கடலை விதையை விதைபரிசோதனை நிலையத்திற்கு அனுப்ப வேண்டும்.

திருச்சி மாவட்டத்தில் விதை பரிசோதனை நிலையம், புத்தூர் நான்கு ரோடு, ஒருங்கிணைந்த விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு வளாகத்தின் கீழ் தளத்தில் திருச்சி -17 என்ற முகவரியில் அமைந்துள்ளது. விதை மாதிரி அனுப்பப் படும் போது, அதுவிதைக் குவியலின் பிரதியாக இருக்க வேண்டும். ஒருவர் ஒன்றுக்கும் மேற்பட்ட மாதிரிகளை அனுப்பும் போது, ஒவ்வொரு மாதிரிக்கும் குறியீட்டு எண்கள் வழங்க வேண்டும்.

சுத்தமான பையில் விதை மாதிரிகளை எடுத்து பயிர் மற்றும் ரகத்தின் விவரங்கள் அடங்கிய துண்டு சீட்டு உள்ளே வைத்து அனுப்பலாம். ஒரு விதை மாதிரிக்கு ரூ.80 பரிசோதனை கட்டணம் செலுத்த வேண்டும் என திருச்சி மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் வே.அறிவழகன், வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா மற்றும் ரெ.ரமா பிரபா நளினி ஆகியோர் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பத்திரம் முக்கியமா? பட்டா முக்கியமா?-ஓர் பார்வை

பொதுவாக நிலத்தையோ, ஒரு வாகனத்தையோ வாங்கும் போது அதனுடைய உரிமையை வாங்குவோரின் பெயருக்கு மாற்றுவதற்கு தேவையான ஆவணம் தான் பத்திரம். பத்திரம் இருந்தால் தான் பட்டா வாங்கிட முடியும் என்பது நாம் அறிந்தே. அந்த வகையில் விவசாயிகளின் பட்டா, பத்திரம் ஆகியவற்றை அறிந்து கொள்ள இந்த பதிவு பயன்படும் என எண்ணி பதிவிடுகிறேன்.

**பத்திரம் என்றால் என்ன?**

பத்திரம் என்பது சொத்தை விற்பனை செய்தவரிடம் இருந்து வாங்குபவரின் பெயருக்கு பதிவு செய்யப்படும் ஆவணமாகும். இது பத்திர பதிவு துறை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து தரப்படும். இது ஒரு சட்டபூர்வமான ஆவணமாகும். நிலம் வைத்திருக்கும் நபர் குறிப்பிட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்வதால், சொத்துக்கான சில உரிமைகளை வைத்திருப்பவருக்கு இந்த ஆவணம் வழங்குகிறது. நிலத்தை வாங்குவதில் பத்திர பதிவு (REGISTRATION) செய்தால் மட்டும் போதுமானது இல்லை. அதை முறையாக பதிவு செய்து பட்டா பெற வேண்டும்.

**பட்டா என்றால் என்ன?**

பட்டா ஒருவர் தன்னுடைய சொத்து மீதான உரிமையை சட்டபூர்வமாக நிரூபிக்கும் ஆவணத்தை தான் பட்டா என்கிறோம்.

பட்டா என்பது நிலத்துக்காக வருவாய்துறை வழங்கும் பதிவு ஆவணம் தான் இந்த பட்டா. ஒரு நிலம் இவர் பெயரில் தான் உள்ளது என்பதை குறிக்கும் வகையில் வருவாய்துறையால் அளிக்கப்படும் சான்றாகும். இதனை நில உரிமை ஆவணம் என்று தான் சொல்லுவார்கள். பட்டாவில் யார் பெயர் உள்ளதோ, அவரே தற்போதைய உரிமையாளர் ஆவார். பட்டா ஆவணத்தில் மாநிலம், மாவட்டம், வட்டம், கிராமம், நிலத்தின் சர்வே எண், நன்செய் / புன்செய், புல எண்கள் விஸ்தீரணம் தீர்வை விபரங்கள் உரிமையாளர் பெயர் அவரின் அப்பா பெயர் போன்றவை அடங்கியிருக்கும்.

**பத்திரம் பட்டா**

பத்திரத்தின் அடிப்படையில் தான் பட்டா பெற முடியும் இது இரண்டுமே முக்கியமானது தான். ஒரு நிலத்திற்கு பத்திரம் மட்டும் இருந்தாலும் கூட அந்த நிலத்திற்கு சட்டபூர்வமான பாதுகாப்பு இல்லை. எதிர்பாராத நிலை யில் அந்த நிலத்தை அரசாங்கம் கையாகப்படுத்தினாலும் நாம் ஒன்றும் செய்ய முடியாது. அதே நேரத்தில அந்த நிலத்திற்கு பட்டா இருந்தால் அது சட்டபூர்வமான நிலம். அந்த நிலத்தை அரசு தேவைக்கு கையாகப்படுத்தினாலும் குறிப்பிட்ட அளவிற்கு நஷ்ட ஈடு கொடுப்பார்கள். எனவே பத்திரம் பதிவு செய்தவர்கள் கண்டிப்பாக பட்டா வாங்க வேண்டும்.

**பட்டா பெறுவது எப்படி?**

பட்டா பெறுவது எளிதான நடைமுறையாகும். ஒரு சர்வே எண் முழுவதும் ஒருவர் வாங்கி இருந்தால் பட்டாவிற்கு விண்ணப்




பித்த நாளிலிருந்து 15 தினங்களுக்குள் தாலுகா அலுவலக மூலமாக பட்டா வழங்கப்படும். அதே போல ஓரே சர்வே எண்ணில் ஒரு பகுதியோ, பெயர் மாற்றம் பெற 30 நாட்களில் விண்ணப்பித்த நாளிலிருந்து கிடைக்கலாம். இதற்கென கட்டணமாக 80 வசூலிக்கப்படுகிறது உரிய ஆவணங்களில் இணைய தளம் (www.tn.give.in/LA/forms) வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும்.

பட்டா இருந்தால் தான் அரசின் நலத்திட்டங்களை தங்கு தடையின்றி பெற முடியும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்

திருவண்ணாமலை, டிச.19

திருவண்ணாமலை, கங்காளமஹாதேவி கிராமத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், இப்கோ, கள அதிகாரி ஆனந்தன், பயிர்களில் இப்கோ நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, மற்றும் சாகரிகா பயன்படுத்தும் முறை மற்றும் நானோ உரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி விவசாயி களுக்கு விளக்கினார்.

மேலும், இரசாயன உரங்களின் பயன்பாட்டால் மண் மாசுபடும் மற்றும் மண் வளம் குறையும் என்றும் மண்வளத்தை காக்க நானோ உரங்களை பயன்படுத்தலாம் என்றும் தெரிவித்தார்.






குறைந்த செலவில் அதிக மகசூல் பெறவும், துல்லியமான முறையில் நானோ உரங்களை தெளிக்கவும். இப்கோ கிசான் ட்ரோன் சேவையை பயன்படுத்தலாம் என்றும் நானோ உரங்களுடன் பிற வேளாண் பூச்சிக் கொல்லி மருந்துகளும் கலந்து தெளிப்பதனால் இடுபொருள் செலவு குறையும் என்றும் கூறினார். மேலும், நானோ உரங்கள் வாங்கினால் இப்கோவின் விவசாயிகளுக்கான விபத்துக் காப்பீடு திட்டமான சங்கட ஹரன் பீமா யோஜனாவின் மூலம் ரூ.2,00,000 வரை காப்பீடு பெறலாம் என்றார். இந்நிகழ்ச்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர்.

# செயல்விளக்கத்திடல் பயிர்களை வேளாண் அலுவலர்கள் கள ஆய்வு



கோயம்புத்தூர், டிச.19

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் சோளம், கொள்ளு, உளுந்து, நிலக்கடலை வகைப் பயிர்கள் தனிப் பயிராகவும், தென்னையில் ஊடு பயிராகவும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நிலக்கடலையில் அதிக மகசூல் தரக்கூடிய 10 ஆண்டுகளுக்கு உட்பட்ட ரகங்களான கதிரிலேபாக்டி 1812, பவானிசாகர் 2, திண்டிவனம் 14 எள் பயிரில் திண்டிவனம் 4, விருதாச்சலம் 7 போன்ற உயர் விளைச்சல் இரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. 2.5 ஏக்கர் பரப்பளவில் உளுந்து செயல்விளக்கத் திடல் பயறு வகைத் திட்டத்தில் எள்மற்றும் நிலக்கடலையில் செயல் விளக்கத் திடல் அமைக்க தேசிய எண்ணெய் வித்துக்கள் திட்டத்தின் கீழ் 50 சதவிதத்தில் மானிய விலையில் வழங்கப்படுகிறது. மேலும் நிலக்கடலை, எள் பயறு வகை மற்றும் தானியங்களில் அதிக மகசூல் மற்றும் மண்ணில் வளத்தினை காக்கவும், நுண்ணூட்டக் கலவைகள், உயிர் உரங்கள் மானிய விலையில் வழங்க இலக்குகள் பெறப்பட்டுள்ளது. மேலும் எள், நிலக்கடலையில் அமைக்கப்பட்ட செயல்விளக்கத்திடலினை விதைப்பண்ணைகளாக அமைக்க ஆய்வு செய்ய வேளாண்மை உதவி இயக்குநர் சக்திவேல் தலைமையில் வேளாண்மை உதவி அலுவலர் செல்வன், தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்துகள் திட்டத்தின் தொழில்நுட்ப உதவியாளர் சூர்யபிரகாஷ் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு கையால் இயக்கப்படும் பழ அறுவடை மற்றும் பாலிதீன் உறைகளை பொருத்தும் கருவிக்கு காப்புரிமை

கோயம்புத்தூர், டிச.19

காப்புரிமை அலுவலகம், வடிவமைப்புகள் மற்றும் வர்த்தக முத்திரைகளின் கட்டுப் பாட்டாளர் ஜெனரல் (கொல்கத்தா), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு மாம்பழ உறையிடு மற்றும் அறுவடை இயந்திர கண்டுபிடிப்புக்கான வடிவமைப்பு காப்புரிமையை வழங்கி உள்ளார்.



இந்த புதுமையான இயந்திரம் இரட்டை நோக்கதோடு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது மரத்திலுள்ள மாம்பழங்களை பைகளில் உறையிடுவதற்கும், முதிர்ந்த பழங்களை அறுவடை செய்வதற்கும் உதவுகிறது. இந்த இயந்திரம், உறையிடும்பிரிவு, அறுவடைபிரிவு, தேவைக்கேற்ப உயரத்தை மாற்றி கொள்ளும் வகையிலான கம்பம், கைப்பிடி முதலிய பாகங்களை கொண்டுள்ளது. கம்பத்தின் உயரம் 4.5 மீட்டர் வரை நீட்டிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, இது மாம்பழ அறுவடைக்கு பயனுள்ளவாறு அமைகிறது. இந்த கருவி இயந்திரங்களால் பழத்தில் காயங்கள் ஏற்படும் அபாயம் குறைவாகவும், எளிதாகவும் பழங்களை அறுவடை செய்ய உதவுகின்றது. கைகளுக்கு எட்டாத அல்லது பறிக்க இயலாத வகையில் உள்ள பழங்களையும் பைகளில் அடைத்துஅறுவடை செய்ய உதவும் வகையில் அமைகிறது. பழங்களை முதிர்ச்சியடையும் போது பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க உதவுகிறது. இந்த கருவி பயன்பாட்டின் மூலம், மாம்பழங்களின் தரம் கணிசமாக உயர்வது கண்டறிப்பட்டுள்ளது.





Rithvik Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
IS 4985 : 2021
IS 9537
ISO
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தை மாவட்ட நபார்டு வங்கி மேலாளர் ஆய்வு



விருதுநகர், டிச.19

நரிக்குடி வட்டாரத்திலுள்ள சிசிடியின் அங்கமான சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தை இன்று விருதுநகர் மாவட்ட நபார்டு வங்கி மேலாளர் ராஜா சுரேஷ்வரன் ஆய்வு செய்தார்.

இந்த FPO நிறுவனம் நபார்டு உதவியுடன் 2016யில் ஆரம் பிக்கபட்டு சிசிடி நிர்வாக இயக்குநர் பத்மாவதி, திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோவின் வழிகாட்டுதலின் பேரில் சிறப்பாக செயல் பட்டு வருகிறது.

மாவட்ட மேலாளர் தனது ஆய்வில் NON-WATER SHED PRO-GRAM களையும் AGRO FORESTRY திட்டத்தில் நடப்பட்ட மரங் கன்றுகளை நெடுங்குளம் கிராம விவசாயி கணேசன் அரசுவின் தோட்டத்தில் ஆய்வு செய்தார். மேலும் காலநிலை மாற்றத்தை எதிர் கொள்ளுவதற்கான தகவமைப்பு செயல்பாட்டை, செயல்படுத்தப் படும் திட்டங்களையும் SOIL & WATER CONVERSATION முறை யில் வெட்டபட்ட பண்ணைக்குட்டை தோண்டபட்ட முடுக்கன்குளம் கிராம விவசாயி அய்யப்பன் நிலத்தை பார்வையிட்டு மண் அரிமானம் ஏற்படாமல் இருக்க, பண்ணைக்குட்டைகளின் வரப்பு களில் வெட்டி வேர் மற்றும் கிலுவை குச்சிகளை நட பரிந்துரைத்தார். மேலும் இயந்திர வாடகை சேவை மையத்தை ஆய்வு மேற்கொண்டு இயந்திரங் களின் செயல்பாட்டினை (விதைப்பான், பவர் வீடர், களை எடுக்கும் கருவி) கேட்டு தெரிந்து கொண்டார். அதற்கான வாடகை பதிவேடுகளை மேற்கொள்ள மாறு கேட்டுக் கொண்டார்.

இந்த கள ஆய்வில் செயல் அலுவலர் பார்த்த சாரதி மற்றும் அக்ரி கிளினிக்யின் விவசாய ஆலோசகர் சந்திர சேகரன் கலந்த கொண்டனர். மேலும் அக்ரி கிளினிக் சார்பாக நெல் மற்றும் நிலக்கடலை கள ஆய்வு (FILED VISIT) மேற்கொள்ளபட்டது.

கள ஆய்வை பற்றி வேளாண் வல்லுநர் சந்திர சேகரன் கூறுகையில், தற்போதைய தொடர் மழையால் பாதிக்கப்பட்ட நெல் பயிருக்கு மேலுரமாக 22 கிலோ யூரியா + 4 வேப்பம் புண்ணாக்கு 18 கிலோ ஜிப்சம் கலந்து ஒரு நாள் வைத்திருந்து மறு நாள் காலையில் 17 கிலோ பொட்டாஷ் கலந்து இடக் கூறினர். நிலக் கடலையில் கரையான் தாக்குதல் செவல் நிலங்களில் அதிகமாக

காணப்படுகிறது. அதை தடுக்க குளோரிபைரிபாஸ் 500 மி.லி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கரையான் பாதிக்கப்பட்ட இடங்களில் மண்ணில் நன்றாக நனையும்படி தெளிக்க கூறினார். இரண்டாம் களை எடுத்தபின் நிலக்கடலையில் ஜிப்சம் 100 கிலோ இட்டு மண் அணைக்க வேண்டும். நெல் பயிர்களில் பாக்டீரியா இலை கருகலை நோயை கட்டுப்படுத்த சாணிபால் அதாவது ஒரு எக்கருக்கு 40 கிலோ பசுஞ்சாணத்தை நீரில் கரைத்து வடித்து பின் மறுநாள் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க கூறினார். மேலும் அனைத்து வகையான இடு பொருட்கள் (விதை, உரம், பூச்சி /நோய் மருந்துகள் ) சேவையூர் அக்ரி கிளினிக்யில் உள்ளது. தேவைப்படும் விவசாயிகள் வாங்கி பயன்படுத்திட கேட்டு கொள்ளப் படுகிறது. இக்கள ஆய்விற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கள அலுவலர்கள் பரதன் பிரியா உடனிருந்து சிறப்பாக செய்திருந்தனர்.

## புதுக்கோட்டை வட்டாரம் கல்லுக்காரன்பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகள் குழு பயிற்சி

புதுக்கோட்டை, டிச.19

புதுக்கோட்டை வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் அட்மா திட்டத்தின் மூலம் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2024-25-ம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்ட கல்லுக்காரன்பட்டி பஞ்சாயத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகள் குழு ராபி பருவத்திற்கான பயிற்சி நடைபெற்றது. இந்தப் பயிற்சியில் புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு.அன்பரசன், கலந்து கொண்டு ராபி பருவத்திற்கு எந்த மாதிரியான பயிர்கள் சாகுபடி செய்யலாம். அதற்கு கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள், பூச்சி நோய் மேலாண்மை குறித்தும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் நோக்கம், செயல்முறைகள் மற்றும் திட்டத்தில் வழங்கப்படும் இடுபொருட்கள், தரிசு நில தொகுப்பு மூலம் பாசன வசதி அமைத்தல் குறித்த விரிவான விளக்கங்கள் எடுத்துக் கூறினார். மேலும் வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப் படும் திட்டங்கள் வேளாண்மை விரிவாக்க மைய கிடங்கில் உள்ள இடுபொருட்கள் குறித்த விபரங்கள் பசுந்தாள் உர பயிர்கள் சாகுபடி, விதைநேர்த்தி, இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் மற்றும் அதன் அடிப்படையில் உரமிடுதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து எடுத்துக் கூறப்பட்டது. பயிற்சியின் முடிவில் அப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் பாண்டிச்செல்வி நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அருளரசு மற்றும் ஸ்ரீநிதி ஆகியோர் செய்திருந்தனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ஐந்து நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி அடுமனைப் பொருட்கள் தொழில் நுட்பக் கலை – பாரம்பரியத்திலிருந்து புதுமை வரை



மதுரை, டிச.19

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை, அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டம் – வேளாண்மையில் பெண்கள் என்ற திட்டத்தின் சார்பில் தேனி மாவட்டம் பெண் விவசாயிகள் மற்றும் சிறு தொழில் தொடங்குபவர்களுக்கு ஐந்து நாள் 10.12.24 முதல் 14.12.24 வரை திறன் மேம்பாட்டு பயிற்சியானது – அடுமனைப் பொருட்கள் தொழில் நுட்பக்கலை – பாரம்பரியத்திலிருந்து புதுமை வரை என்ற தலைப்பில் 10.12.24 ஆம் தேதி சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் துவங்கப் பட்டது. இதில் முனைவர் ச.ஆரோக்கிய மேரி, இணை பேராசிரியர் வரவேற்புரை மற்றும் இந்நிகழ்வு நடைபெறு வதற்கான நோக்கம் குறித்து எடுத்துரைத்தார். மதுரை சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின், முதல்வர், முனைவர் ச.காஞ்சனா, இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று மதிப்புக் கூட்டுதலில் மேம் படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களின் பங்கு, நவீன முறை பேக்கிங் தொழில் நுட்பம், மின்னணு தொழில் தொழில் நுட்பங் களை பயன்படுத்தி இணையவழி சந்தைபடுத்துதல் மற்றும் அடுமனைப் பொருட்களின் எதிர்காலம் குறித்து எடுத்துரைத்தார். முனைவர் இர.விஜய லெட்சுமி, திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர் ஜெ.புஷ்பா, முனைவர் க.சசிதேவி, மூத்த விஞ்ஞானி மற்றும் எம்.ரம்யா சிவசெல்வி எஸ்.எம்.எஸ் ஆகியோர் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் தொழில்முனைவோர் மேம்பாட்டில் தொழில் நுட்பம் குறித்த செயல்விளக்கம் மற்றும் அனுபவத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தனர்.

தேங்காய் பன், ஜாம் பன் மற்றும் கீரிம் பன் போன்றவை தயாரித்தல் பற்றி செயல்முறை விளக்கத்துடன் பயிற்சியளிக்கப் பட்டது. சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள ஒருங்கிணைந்த இன்குபேன் மையம்

(Common Incubation Centre) உள்ள பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்தும் இயந்திரங்கள் மற்றும் பயறுகள் பதப்படுத்தும் இயந்திரங்களை பார்வையிட்டனர். இதில் 30 பெண் விவசாயிகள் மற்றும் சிறு தொழில் தொடங்குபவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## உணவுகளில் எஞ்சிய நஞ்சை தவிர்த்திட பூச்சிக்கொல்லி மருந்துகளை அளவோடு பயன்படுத்த விவசாயிகளுக்கு பயிற்சி

புதுக்கோட்டை, டிச.19

வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் அட்மா மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் மூலம் வண்ணாரப்பட்டி கிராமத்தில் பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப் பள்ளியின் அறிமுக வகுப்பு நடத்தப்பட்டது. பண்ணைப் பள்ளியில் புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அன்பரசன் கலந்து கொண்டு விவசாயி களுக்கு குறைந்த விதையினை பயன்படுத்தும் விதம், அதிக மகசூல் பெறுவது, பண்ணைப்பள்ளியில் ஆறு வகுப்புகளில் எந்தமாதிரியான பயிற்சிகள் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் அதன் சாராம்சங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்க மளிப்பட்டது. மேலும் அறிமுக வகுப்பில் நிலம் தயார் செய்யும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டது. புதுக்கோட்டை வேளாண்மை விரிவாக்க மையத்தில் செயல் படுத்தப்படும் பல்வேறு மானியத் திட்டங்கள், நுண்ணீர் பாசனம் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை அலுவலர் தரக்கட்டுப்பாடு முகமது ரபி, நன்மை செய்யும் பூச்சிகள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகள் குறித்துதெளிவாக விளக்க மளிக்கப் பட்டது. பயறு வகை சாகுபடியில் பூச்சி நோய் மேலாண்மையில் உயிரியல் உத்திகளான டிரைக்கோடெர்மாவிரிடி, சூடோ மோனாஸ், மெட்டாரைசியம்,பேவேரியாஆகியவற்றை பயன் படுத்திடவும் பயிற்சியளிக்கப்பட்டது. பூச்சி மருந்துகளை, பொருளாதார சேத நிலைக்கு மேல் பூச்சிகளின் தாக்குதல் தென்பட்டால் மட்டுமே பயன்படுத்தவும். மேலும் பரிந்துரை செய்யப்பட்ட அளவினை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப் பட்டது. இதன் மூலம் உணவில் எஞ்சியநஞ்சினைதவிர்க்கலாம் என விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. முன்னதாக உதவி தொழில்நுட்ப மேலாளர் அருளரசு வரவேற்புரையாற்றினார். பயிற்சியில் அப்பகுதியை சேர்ந்த 25 விவசாயிகள் கலந்து கொண்டுபயிற்சி பெற்றனர்.

பயிற்சியின் முடிவில் அப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் ஆர்.சரவணன் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர் ஸ்ரீநிதி செய்திருந்தார்.

## தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்



# இராமநாதபுரம் வட்டாரத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் வேளாண் அதிகாரிகள் ஆய்வு



இராமநாதபுரம், டிச.19

இராமநாதபுரம் வட்டாரத்தில் முதலமைச்சரின் – உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் வேளாண்மை இணை இயக்குநர் யூ.மோகன்ராஜ், வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம் & மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்) ஸி.ம்.பாஸ்கரமணியன், வேளாண்மை உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு) ய.றூ.நாகராஜன் ஆகியோர் 2024-25 ஆம் நிதி ஆண்டில் வேளாண்மைத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்தனர்.

முதலாவதாக இராமநாதபுரம் விவசாய கிடங்கில் உள்ள விவசயிகளுக்கு அளிக்கப்படும் வேளாண் இடுபொருட்களின் தன்மையினை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். பிறகு முதுனாள் கிராமத்தில் உணவு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் (FNS-Rice) ÿµ Cropping System Based Demonstration செயல்விளக்கத்திடலை ஆய்வு செய்தனர். அதன் பின்னர் பேராவூர் கிராமத்தில் விதைப் பண்ணை திடல் கீழ் நெல் – யூஹியூ 15048 வயலினை ஆய்வு செய்தனர். பெருவயல் கிராமத்தில் கலைஞரின் அனைத்துக்கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் (KAVIPAD) கீழ் முட்புதர்களை அகற்றி அதே வயலில் தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் (TNMM) கீழ் குதிரைவாலி பயிரிட்ட வயலினை ஆய்வு செய்து விவசாயிகளிடம் கலந்துரையாடினர்.

கடைசியாக வேளாண்மை விரிவாக்க மையத்தில் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் (SADS) கீழ் 50% மானியத்தில் நெல் பயிருக்கான ஜிங்க் சல்பேட் மற்றும் கலைஞரின் அனைத்துக் கிராம வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50% மானியத்தில் பேட்டரி ஸ்பிரேயர்யினை விவசாயிகளுக்கு விநியோகித்து அதனை பயன்படுத்தும் விதம் ஆகியவற்றை எடுத்துரைத்தனர்.

உடன் வேளாண்மை உதவி இயக்குநர் (பெ) ஷீ.அம்பேத்குமார், வேளாண்மை அலுவலர் ந.தமிழ், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஜெயக்கொடி, சுதாமதி, குணசேகரன், முத்துக்குமார், சித்திரைச்செல்வி மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ப.கோசலாதேவி இருந்தனர்.

# பயறு வகை பயிரில் அதிக மகசூல் பெற விதை தரம் அறிந்து விதைப்பு செய்ய வேண்டும்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உளுந்து மற்றும் பச்சைப்பயறு பயிர்கள் தைப்பட்டத்தில், அதாவது சம்பா நெல் அறுவடைக்குப்பின் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இப்பயிர்களில் அதிக மகசூல் பெற பயிர் எண்ணிக்கை பராமரித்தல் முக்கியமான செலவில்லாத தொழில்நுட்பமாகும். பயறு வகை பயிர்கள் சாகுபடியில் ஒரு சதுரமீட்டருக்கு 33 செடிகள் என்றளவில் பாராமரித்தல் அவசியமானதாகும். இவ்வாறு பயிர் எண்ணிக்கை பராமரிக்க சாகுபடி செய்ய உள்ள வயலை தயாரிப்பதில் எவ்வளவு கவனம் செலுத்த வேண்டுமோ அதைவிட அதிக கவனம் தரமான விதைகளைப்பயன்படுத்துவதில் இருக்க வேண்டும். இதற்கு விவசாயிகள் சான்று பெற்ற விதைகளையே வாங்கி பயன்படுத்த வேண்டும். சான்று பெற்ற விதைகள் அனைத்தும், விதைச்சான்று அலுவலர்களால் வயல் ஆய்வில் வயல் தரம் உறுதி செய்யப்பட்டு பின்னர், விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை பரிசோதனை செய்து, முளைப்புத்திறன், விதையின் புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற இரகக்கலவன் / பிற பயிர் விதைகள் அனுமதிக்கப்பட்ட அளவு கொண்டுள்ளதா? என்பதை உறுதி செய்த பின்னர் விநியோகிக்கப்படுவதால், சான்று பெற்ற விதைகளைப் பயன்படுத்தி தேவையான பயிர் எண்ணிக்கையினை பராமரிக்க வேண்டும்.

விவசாயிகள் தங்களது கைவசம் உள்ள உளுந்து மற்றும் பச்சைப்பயறு விதைகளை விதைக்கும் சூழ்நிலையில், விதையின் குறைந்தபட்ச முளைப்புத்திறன் 75%, புறத்தூய்மை 98 %, அதிக பட்ச ஈரப்பதம் 9%க்குள் உள்ளதா? என்பதை அறிந்து விதைப்பு செய்தால் உளுந்து மற்றும் பச்சைப்பயறு சாகுபடியில் அதிக மகசூல் பெற நாகப்பட்டினம் மாவட்டத்தில் வெளிப்பாளையம் 15, காளியம்மன் கோயில் தெருவில் செயல்பட்டு வரும் விதைப் பரிசோதனை நிலையத்தில், விதைகளின் முளைப்புத்திறன் அறிய 100 கிராம் விதையினை துணிப்பையில் இட்டும், ஈரப்பதம் அறிய தனியே 100 கிராம் அளவு விதைகளை காற்றுபுகாத பாலிதீன் பைகளில் இட்டும் பயிர், இரகம், தேவையான ஆய்வு விபரங்களை குறிப்பிட்டு மாதிரிகளைக்கொடுத்து மாதிரிக்கு ரூ.80 /- மட்டும் செலுத்தி விதைகளை பரிசோதனை செய்து பரிசோதனை முடிவு களை விவசாயிகள் அறிந்து கொண்டு பயன்பெறலாம் என நாகப் பட்டினம் மாவட்டத்திற்கான தஞ்சாவூர் சரக விதை பரிசோதனை அலுவலர் து.சிவவீரபாண்டியன் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் அ.அமுதாதேவி, செ.பிரசன்னா ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.